நீரோங்கிவளர்கமலநீர்பொருந்தாத்தன்மையன்றே
யாரோங்கிமுகமலர்ந்தாகநற்றருவினையேன்றிறமறிந்துன்
னூரோங்குமபழிபாராதுன்பாலேவிழுந்தொழிந்தேன்
சீரோங்குமபொழிற்கோடைத்திரிலோக்கியசுந்தரனே. (க)

நையாதமனத்தினனைநைவிப்பானித்தெருவே
யையாநீயுலாப்போந்தவன்றுமுதலின்றுவரை
கையாரத்தொழுதருவிகண்ணாரச்சொரிந்தாலுஞ்
செய்யாயோவருள்கோடைத்திரிலோக்கியசுந்தரனே. (உ)

அம்பளிங்குபகலோன்பாலடைப்பற்றாயிவண்மனத்தின்
முன்பளிங்கினாதலினின்முகந்தோன்றவிளங்கிற்றால்
வம்பளிந்தகனியேயென்மருந்தேநல்வளர்முக்கட்
செம்பளிங்கேபொழிற்கோடைத்திரிலோக்கியசுந்தரனே. (ரு)

மைஞ்ஞின்றகுழலாடன்மனந்தரவும்வளைதாரா
திஞ்ஞின்றகோவணவாவிவன்செய்தகியாசெய்தார்

மெய்ஞ்ஞின்றதமர்க்கெல்லாமெய்ஞ்ஞின்றிற்கும்பண்பின்று
செய்ஞ்ஞன்றியிலன்கோடைத்திரிலோக்கியசுந்தரனே. (௪)

நீவாராதொழிந்தாலுநின்பாலேவிழுந்தேழை
கோவாதமணிமுத்துங்குவளைமலர்சொரிந்தனவா
லாவாவென்றருள்புரியாயமரர்கணந்தொழுதேத்துந்
தேவாதென்பொழிற்கோடைத்திரிலோக்கியசுந்தரனே. (௫)

முழுவதுநீயானாலுமொய்குழலாண்மெய்முழுதும்
பழுதெனவேநினைந்தோராள்பயில்வதுநின்றிருநாம
முழுவதுநின்றிறநினைந்தேயதுவன்றேபெறும்பேறு
செழுமகில்சூழ்பொழிற்கோடைத்திரிலோகசுந்தரனே. (௬)

தன்சோதியெழுமேனித்தமனியப்பூஞ்*சாய்க்காட்ட
வுன்சோதியெழில்காண்பானேலிடவுருகாட்டாய
துஞ்சாகண்ணிவளுடையதுயர்தீருமாறுரையாய்
செஞ்சாலிவயற்கோடைத்திரிலோக்கியசுந்தரனே. (௭)

அரும்பேதைக்கருள்புரியாதொழிந்தாய்நின்னவிர்சடைமே
னிரம்பாதபிறைதூவுநெருப்பொடுநின்கையிலியாழ
நரம்பாலுமுயிரீர்ந்தாய்நளிர்புரிசைக்குளிர்வனம்பா
திரம்போதுசொரிகோடைத்திரிலோக்கியசுந்தரனே. (௮)

ஆறாதபேரன்பினவருள்ளங்குடிகொண்டு
வேறாகப்பலர்சூழவீற்றிருத்தியதுகொண்டு
வீறாடியிவளுன்னைப்பொதுநீப்பான்விரைந்தின்னந்
தேறாடென்பொழிற்கோடைத்திரிலோக்கியசுந்தரனே. (௯)

சரிந்ததுகிறளர்ந்தவிடையவிழ்ந்தகுழலிளந்தெரிவை
யிருந்தபரிசொருநாள்கண்டிரங்காயெம்பெருமானே
முரிந்தநடைமடந்தையர்தம்முழங்கொலியும்வழங்கொலியுந்
திருந்துவிழவணிகோடைத்திரிலோக்கியசுந்தரனே. (௰)

ஆரணத்தேன்பருகியருந்தமிழ்மாலைகமழவருங்
காரணத்தினிலைபெறுமகருவூரன்றமிழ்மாலை
பூரணத்தாலீரைந்தும்போற்றிசைப்பார்காந்தாரஞ்
சேரணத்தபொழிற்கோடைத்திரிலோக்கியசுந்தரனே. (௰௧)

திருச்சிற்றம்பலம்.

---

* சாயக்காடு-என்பது சோழநாட்டிலிருக்குந் தலங்களிலொன்று.

(௯ வது. கங்கைகொண்டசோளேச்சரம்-பண்-பஞ்சமம்.)

திருச்சிற்றம்பலம்.

அன்னமாய்விசும்புபறந்தயன்றேடவங்ஙனேபெரியநீசிறிய, வென்னையாள்விரும்பியென்மனம்புகுந்த வெளிமையையென்றும்நான்மறக்கேன், முன்னமாலறியாவொருவனாமிருவா முக்கணாநாற்பெருந்தடந்தோட, கன்னலேதேனேயமுதமேகங்கைகொண்டசோளேச்சரத்தானே.

உண்ணெகிழ்ந்துடலநெக்குமுக்கண்ணாவோலமென்றோலமிட்டொருநாண், மண்ணினின்றலறேன்வழிமொழிமாலைமழலையஞ்சிலம்படிமுடிமேற், பண்ணிநின்றுருகேன்பணிசெய்யேனெனினும்பாவியேனாவியுள்புகுந்தென், கண்ணினின்றகலானென்கொலோகங்கைகொண்டசோளேச்சரத்தானே. (௨)

அற்புதத்தெய்வமிதனின்மற்றுண்டே யன்பொடுதன்னையஞ்செழுத்தின், சொற்பதத்துள்வைத்துள்ளமள்ளூறுந் தொண்டருக்கெண்டிசைக்கனகம், பற்பதக்குவையும்பைம்பொன்மாளிகையும்பவளவாயவர்பணைமுலையும், கற்பகப்பொழிலுமுழுதுமாங்கங்கைகொண்டசோளேச்சரத்தானே. (௩)

ஐயபொட்டிட்டவளகவாணுதலு மழகியவிழியும்வெண்ணீறுஞ், சைவமிட்டிட்டசடைகளுஞ்சடைமேற் றரங்கமுஞ்சதங்கையுஞ்சிலம்பு, மொய்கொளெண்டிக்குங்கண்டநின்றொண்டர் முகமலர்ந்திருகணீரரும்பக், கைகள்மொட்டிக்குமென்கொலோகங்கை கொண்டசோளேச்சரத்தானே. (௪)

சுருதிவானவனாந்திருநெடுமாலாஞ்சுந்தரவிசும்பினிந்திரனும்
பருதிவானவனும்படர்சடைமுக்கட்பகவனுமகவுயிர்க்கமுதா [ங்
மெருதுவாகனனுமெயில்கண்மூன்றெரித்தவேறுசேவகனுமாம்பின்னு
கருதுவார்கருதுமுருவமாங்கங்கைகொண்டசோளேச்சரத்தானே. (௫)

அண்டமோரணுவாம்பெருமைகொண்டணுவோ ரண்டமாஞ்சிறுமைகொண்டடியே, னுண்டவூணுனக்காமவகையெனதுள்ள முள்கலந்தெழுபரஞ்சோதி, கொண்டநாண்பாம்பாம் பெருவரைவில்லிற்குறுகலார்புரங்கண்மூன்றெரித்த, கண்டனேநீலகண்டனேகங்கை கொண்டசோளேச்சரத்தானே. (௬)

மோதலைப்பட்டகடல்வயிறுதித்தமுழுமணித்திரளமுதாங்கே
தாதலைப்பட்டங்குருகியொன்றாயதன்மையிலென்னைமுன்னீன்ற

நீதலைப்பட்டாலியானுமவ்வகையேநிசரிருவரோடொருவர்
காதலிற்பட்டகருணையேகங்கைகொண்டசோளேச்சரத்தானே. (எ)

தத்தையங்கனையார்தங்கண்மேல்வைத்த தயாவைநூறாயிரங்கூறி
டத்திலங்கொருகூறுன்கண்வைத்தவருக்கமருலகளிக்குநின்பேருரும்,
பித்தனென்றொருகாற்பேசுவரேனும்பிழைத்தது பொறுத்தருள்செய்
துன், கைத்தலமடியேன்சென்னிமேல்வைத்தகங்கைகொண்டசோளே
ச்சரத்தானே. (அ)

பண்ணியதழல்காய்பாலளாநீர்போற்பாவமுன்பறைந்துபாலனைய,
புண்ணியம்பின்சென்றறிவினுக்கரியபுகுந்ததோர்யோகினிற்பொலிந்
து, நுண்ணியையெனினுநம்பநின்பெருமை நுண்ணிடையொடுங்கநீவ
ந்தென், கண்ணினுண்மணியிற்கலந்தனைகங்கை கொண்டசோளேச்ச
ரத்தானே. (௯)

அங்கைகொண்டமரர்மலர்மழைபொழியவடிச்சிலம்பலம்பவந்தொ
ருநா, ளுங்கைகொண்டடியேன்சென்னிவைத்தென்னையுய்யக்கொண்
டருளினைமருங்கிற், கொங்கைகொண்டனுங்குங்கொடியிடைகாணிற்
கொடியளென்றவிர்சடைமுடிமேற், கங்கைகொண்டிருந்தகடவுளேகங்
கைகொண்டசோளேச்சரத்தானே. (௰)

மங்கையோடிருந்தேயோகுசெய்வானைவளரிளந்திங்களைமுடிமேற்
கங்கையோடணியுங்கடவுளைக்கங்கைகொண்டசோளேச்சரத்தானை
யங்கையோடேந்தித்திரிகருவூரனறைந்தசொன்மாலையாலாழிச
செங்கையோடுலகிலரசுவீற்றிருந்துதிளைப்பதுஞ்சிவனருட்கடலே (௰௧)

திருச்சிற்றம்பலம்.

(எ-வது. திருப்பூவணம்-பண்-பஞ்சமம்.)

திருச்சிற்றம்பலம்.

திருவருள்புரிந்தாளாண்டுகொண்டிங்ஙனே சிறியனுக்கினியதுகாட்டிப்
பெரிதருள்புரிந்தானந்தமேதருநின்பெருமையிற்பெரியதொன்றுளதே
மருதரசிருங்கோங்ககிலமருசாடிவனாவளங்கவர்ந்திழிவையைப
பொருதிரைமருங்கோங்காவணவீதிப்பூவணங்கோயில்கொண்டாயே.

பாம்பணைத்துயின்றோனயன்முதறேவர் பன்னெடுங்காலநிற்கா
ண்பா, னேமபலித்திருக்கவென்னுளம்புகுந்தவெளிமையையென்றும்
நான்மறக்கேன், றேம்புனற்பொய்கைவாளைவாய்மடுப்பத்தெளிதருதே
றல்போந்தொழுகும், பூம்பணைச்சோலையாவணவீதிப்பூவணங்கோயி
ல்கொண்டாயே. (௨)

சனாதடலொளியிற்பெருந்தகையாய்மகையினிற்கட்டியபசயிற்று,வி
ருதலையொருநாயிப்பவரவமொருநா ளிருந்திடாயெங்கள்கண்முகப்பே
விரிதிகழ்விழவின்பின்செலவோர்பாடல்வேடனையின்விழுந்தபோதயி
ழ்ந்த, புரிசைசூழ்குமாரவனவீதிப்பூவணங்கோயில்கொண்டாயே.

கண்ணியன்மணியின்சூழல்புக்கசேகலந்துபுகழொடுங்கினேற்கங்க
ணுண்ணியைபெயினுநம்பிநின்பெருமைநுண்ணிமைபிறர்தமையறிவ
ர், மண்ணியன்மாமிறங்கிருண்முழுமபின்வண்டினம்பாடிநின்றுடும்
புண்ணியமகளிராவணவீதிப்பூவணங்கோயில்கொண்டாயே. (௪)

கடுவினைபாசக்கடல்கடந்தைவர்கள்ளரைமெள்ளவேதுரந்து
னடியிணையிரண்டுமடையுமாறடைந்தே னருள்செய்வா யருள்செயா
தொழிவாய், நெடுநிலைமாடத்திரவிருள்கிழிக்கநிலைவிளக்கலகில்சாலேக
மபுடைகிடந்திலங்குமாவணவீதிப்பூவணங்கோயில்கொண்டாயே. (ரு)

செம்மனக்கிழவோரன்புதாவென்றுன்சேவடிபார்த்திருந்தலச [தே
வெம்மனம்புகுதிபொண்டிருபாப்பதறியானொன்றுடையடிமைதானியா
தம்மனங்குளிர்நாடபலிகசெழுந்தருளவரிவைபாரவிழ்குழறசுரும்பு
பொம்மெனமுரலுமாவணவீதிப்பூவணங்கோயில்கொண்டாயே. (௬)

சொன்னவின்முறைநான்காரணமுணராச்சூழல்புக்கொளித்தநீயின்
று, கன்னவின்மனத்தென்கண்வலைப்படுமிககருணையிற்பெரியதொன்
றுளதே, மின்னவில்கனகமாளிகைவாய்தல்விளங்கிளம்பிறைதவழ்மா
டம்,பொன்னவிர்புரிசையாவணவீதிப்பூவணங்கோயில்கொண்டாயே.

பூவணங்கோயில் கொண்டெனையாண்ட புனிதனைவனிதைபாகனைவெ
ண், கோவணங்கொண்டுவெண்டலையேந்துங்குழகனையழகெலாநிறைந்
த, தீவணன்றன்னைச்செழுமறைதெரியுந்திராச்சருவூரன்சொன்னதமி
வணத்தமிழ்கள்பத்துமவல்லார்களாபரமனதுருவமாவரே. (அ க௦-ம)

திருச்சிற்றம்பலம்.

(அ-வது. திருச்சாட்டியக்குடி-பண்-பஞ்சமம்.)

திருச்சிற்றம்பலம்.

பெரியவர்கருணையிளநிலாவெறிக்குமபிறைதவழ்சடைமுடிப்பவி
ழ்ந்து, சரியுமாகுழியங்குழைமிளிர்ந்திருபாலுமிழ்ந்தவாகாதுகள்கண்
டங், கரியவாதாமுஞ்செய்யவாய்முறுவலகாட்டுமோசாட்டியக்குடியார்,
இருகைகூப்பினகண்டலாததவர்முகமேயிருக்கையிலிருந்தவீசனுகே

பாந்தள்பூணாரம்பரிகலங்கபாலம்பட்டவர்த்தனமெருதன்பர்
வார்ந்தகண்ணருவிமஞ்சனசாலைமலைமகள்மகிழ்பெருந்தேவி
சாந்தமுந்திருநீறருமறைகீதஞ்சடைமுடிசாட்டியக்குடியா
ரேந்தெழிலிதயங்கோயில்மாளிகையேழிருக்கையுளிருந்தவீசனுக்கே.

தொழுதுபின்செல்வதயன்முதற்கூட்டந் தொடாவனமறைகளுண்கெனினுங், கழுதுறுகரிகாடுறைவிடம்போர்வைகவந்திகைகரியுரிதிரிந்துண், டழலுமிழரவங்கோவணம்பளிங்குசெபவடஞ்சாட்டியக்குடியார், இழுதுநெய்சொரிந்தோமப்புகையொளிவிளக்கேழிருக்கையிலிருந்தவீசனுக்கே. (௩)

பதியெனமறைதும்புருவர்நாரதரும்பரிவொடுபாடுகந்தர்ப்பா
கதியெலாமரங்கபணையழுவுலகிற்கடியிருட்டிருநடம்புரியுஞ்
சதியிலாகதியிலொலிசெய்யுங்கையிற்றமருகஞ்சாட்டியக்குடியா
ரிதயமாங்கமலங்கமலவர்த்தனையேழிருக்கையிலிருந்தவீசனுக்கே. (௪)

திருமகன்முருகன்றேவியேயுமையாடிருமகளமருமகன்றாயா
மருமகன்மதனன்மாமனேயிமவான்மலையுடையரையர்தம்பாவை
தருமலிவளனூர்சிவபுரன்றோழன்றனபதிசாட்டியக்குடியா
ரிருமுகங்கழல்மூன்றேழுகைத்தலமேழிருக்கையிலிருந்தவீசனுக்கே.

அனலமேபுனலேயனிலமேபுவனியம்பராவம்பரத்தளிக்குங், கனகமே
வெள்ளிக்குன்றமேயென்றன் களைகணேகளைகணமறுவில்லாத, தனிய
னேனுள்ளங்கோயில்கொண்டருளுஞ்சைவனேசாட்டியக்குடியார்க
கினியதீங்கனியாயொழிவறநிறைந்தே ழிருக்கையிலிருந்தவாழியம்பே.

செம்பொனேபவளக்குன்றமேநின்றதிசைமுகன்மாலமுதற்கூட்டத்
தன்பரானவர்கள்பருகுமாரமுதேயத்தனேபித்தனேனுடைய
சம்புவேயணுவேதாணுவேசிவனேசங்கராசாட்டியக்குடியார்க்
கின்பனேயெங்குமொழிவறநிறைந்தேழிருக்கையிலிருந்தவாழியம்பே.

செங்கணாபோற்றிதிசைமுகாபோற்றிசிவபுரநகருள்வீற்றிருந்த
வங்கணாபோற்றியமரனேபோற்றியமரர்கட்டலைவனேபோற்றி
தங்களுணமறைநூல்சகலமுங்கற்றோர்சாட்டியக்குடியிருந்தருளு
மெங்கணாயகனேபோற்றியேழிருக்கையிறைவனேபோற்றியேபோற்றி.

சித்தனேயருளாய்செங்கணாவருளாய்சிவபுரநகருள்வீற்றிருந்த
வத்தனேயருளாயமரனேயருளாயமரர்களதிபதியருளாய்
தத்துநீர்ப்படுகொத்தண்டலைசூழற்சாட்டியக்குடியுளேழிருக்கை [கே.
முத்தனேயருளாய்முதல்வனேயருளாய்முன்னவாதுயர்கெடுத்தெனக்

தீட்டரும்பொழிலின்மைம்பொழிபந்தராக் தண்டலைச்சாட்டியக்குடி
யார், ஈட்டியபொருளாயிருக்குமேதிருக்கண்ணுதலவன்றிருவடிமலாமே
ற், காட்டியபொருட்கலைபயில்கருவூரன்கழறுசொன்மாலையீரைந்து
மாட்டியசிந்தைமைந்தருக்கன்றேவளரொளிவிளக்குவானுலகே. (௰)

திருச்சிற்றம்பலம்.

(௯-வது. தஞ்சை இராசராசேச்சரம் பண்-பஞ்சமம்.)

திருச்சிற்றம்பலம்.

உலகெலாந்தொழவந்தெழுகதிர்ப்பரிதியொன்றுநூறாயிரகோடி
யலகெலாம்பொதிந்ததிருவுடம்பச்சோவங்கனேயழகிதோவரணம்
பலகுலாம்படைசெய்நெடுநிலைமாடமருவரைஞாங்கர்வெண்டிங்க
ளிலைகுலாம்பதணத்திஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே. (௧)

நெற்றியிற்கண்ணென்கண்ணினின்றகலாநெஞ்சினின்றிலங்குசிலம்பலர்செம்
பொற்றிருவடியென்குடிமுழுதாளப்புகுந்தனபோந்தனவில்லை
மற்றெனக்குறவென்மறிதிரைவடவாற்றிடுபுனன்மதகில்வாழ்முதலை
யெற்றுநீர்க்கிடங்கினிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே. (௨)

சடைகெழுமகுடந்தண்ணிலாவிரிய வெண்ணிலாவிரிதருதரளக், குடைநிழல்விடைமேற் கொண்டுலாப்போதுங் குறிப்பெனோகோங்கிணரனைய, குடைகெழுநிருபர்முடியொடுமுடிதேய்ந்துக்கசெஞ்சுடர்படிகுவையோங்கு, கிடைசெழுமாடத்திஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே. (௩)

வாழியம்போதத்தருகுபாய்விடயம்வரிசையின்விளக்கலினடுத்த
சூழலம்பளிங்கின்பாசலராதிச்சுடர்விடுமண்டலம்பொலியக்
காழகில்கமழுமாளிகைமகளிர்கங்குல்வாயங்குலிகெழும
யாழொலிசிலம்புமிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே. (௪)

எவருமாமறைகளைவையுமவானவர்களிட்டெழுந்தாட்டுருக்கமலத்
தவருமாலவனுமறிவருமபெருமையடலழலுமிழ்தழற்பிழம்ப
ருவரிமாகடலிலொலிசெயமாமறுகிலுற்கலிற்றரசினீட்ட
மிவருமாலவரைசெய்யிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே. (௫)

அருளுமாறருளியாளுமாறாளவடிகடம்மழகியவிழியுங்
குருளுமவார்காதுங்காட்டியானென்பெற்றதாயினைமயல்செய்வதழகோ
தரளவான்குன்றிற்றண்ணிலாவிவந்ததருகுவாலபெருகுவான்றெருவி
னெருளொலாமகிழியுமிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே. (௬)

தனிப்பெருந்தாமேமுழுதுறப்பிறப்பின்றளிநிறப்பிலேயுகிர்வென்றாத்,
நினைப்பருந்தம்பாற்சேறலின்றேதுநெஞ்சிடித்துருகுவதென்னோ
சுனைப்பெருங்கலங்கற்பொய்கையுங்கமழ்நீர்சூழல்மாளிகைசுடர்வீசு
மெனைப்பெருமணஞ்செயிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே

பன்னெடுங்காலம்பணிசெய்துபழையோர்தாம்பலரேம்பலித்திருக்க
வென்னெடுங்கோயினெஞ்சுவீற்றிருந்த வெளிமையையென்றும்நான்
மறக்கேன், மின்னெடும்புருவத்திளமயிலனையார்விலங்கல்செய்நாடக
சாலை, யின்னடம்பயிலுமிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே

மங்குல்சூழ்போழ்தினெழிவறநிறைந்துவஞ்சகர்நெஞ்சகத்தொளிப்பா
ணங்கழற்சுடராமவர்க்கிளவேனலலர்கதிரனையவாழியரோ
பொங்கெழிற்றிருநீறழிபொசிவனபிற்புனறுஞ்சுமவிர்சடைமுழுப்ப
ரெங்கணுநெகிழியரிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே. (௯)

தனியொத்தனையொராயிரவருமாந்தன்மையொன்வயத்தினராங்
கனியரத்தருதீங்கரும்பர்வெண்புரிநூற்சட்டியரட்டவாரமிர்தர்
புனிதர்பொற்கழலாபுரிசடாமகுடர்புண்ணியர்பொய்யிலாமெய்யர்க்
கினியரொத்தனையுமிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே. (௰)

சரளமந்தாரசண்பகவகுளசந்தனாகந்தனவனத்தி, னிருள்விரிமு
ழுப்பினிஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவரை, யருமருந்தருந்தி
யல்லறீர்கருவூரறைந்தசொன்மாலையீரைந்தின், பொருள்மருந்துடை
யோர்சிவபதமென்னும்பொன்னெடுங்குன்றுடையோரே. (௰௧)

திருச்சிற்றம்பலம்.

(௰-வது. திருவிடைமருதூர்-பண்-பஞ்சமம்.)

திருச்சிற்றம்பலம்.

வெய்யசெஞ்சோதிமண்டலம்பொலியவீங்கிருணடுநல்யாமத்தோர்
பையசெம்பாந்தள்பருமணியுமிழ்ந்துபாவியேன்காதல்செய்காதி
லையசெம்பொற்றோடவிர்சடைமுழுப்பினழிவழகியதிருநீற்று
மையசெங்கண்டத்தண்டவானவர்கோன்மருவிடந்திருவிடைமருதே.

இந்திரலோகமுழுவதும்பணிசேட்டிணையடிதொழுதெழத்தாம்போ
யந்தலைநாகமோலைபணியாவகந்தொறும்பலிதிரியடிக
டந்திரிவீணைகீதமும்பாடச்சாதிகின்னரங்கலந்தொலிப்ப
மந்திரகீதந்தீங்குழலெங்குமருவிடந்திருவிடைமருதே. (௨)

பணிபடுமதியம்பயில்கொழுந்தன்னம் பலலவம்பல்லியென்றிருந்தனே
வினைபடுகனகம்போலயாவையுமாயவிங்குலகொழிவறநிறைந்து
துனிபடுகலவிமலைய ரூடலாய்ப்பதாயிருண்டுநல்யாமத்தென்
மனனிடையனுகிநுணிகியுள்கலந் தோன்மருவிடந்திருவிடைமருதே.

அணியுமிழ்சோதியணியினுள்கலந்தாங்கடியனேனுளங்கலந்தடியேன்
பணிமகிழ்ந்தருளுமரிவைபாகத்தன்படர்சடைவிடமிடற்றடிக
டணியுமிழாடையரையிலோராடைசுடருமிழ்தரவதினருகே
மணியுமிழ்நாகமணியுமைந்நிலைபமருவிடந்திருவிடைமருதே. (௪)

பந்தமும்பிரிவுந்தெரிபொருட்பனுவற்பழிவழிசென்றுசென்றேறிச்
சிந்தையுந்தானுங்கலந்ததோர்கலவிதெரியினுந்தெரிவுறுவண்ண [ம்
மெந்தையுந்தாயும்யானுமென்றிருந்தனேயெண்ணில்பல்லூழிகளுடனா
வந்தனுகாதுநுணிகியுள்கலந்தோன்மருவிடந்திருவிடைமருதே. (௫)

எரிதருகரிகாட்டிடுபிணநிணமுண் டேப்பமிட்டிலங்கெயிற்றழல்வாய்த்
துருகழல்நெடும்பேய்க்கணமெழுந்தாடுந்தூங்கிருணடுநல்யாமத்தே
யருள்புரிமுறுவன்முகிழ்நிலாவெறிப்பவந்துபோந்தெழிறிருமேனி
வரியரவாடவாடுமெம்பெருமான்மருவிடந்திருவிடைமருதே. (௬)

எழிலையாழ்செய்கைப்பசுங்கலன்விசும்பினின்றுளிபடநனைந்துருகி
யழலையாய்ப்புருவமபுனலொடுங்கிடந்தாங்காதனேன்மாதராக்கலவித்
தொழிலையாய்நெருசமிடாபடாவண்ணந்தூங்கிருணடுநல்யாமத்தோர்
மழலையாழ்சிலம்பவந்தகம்புகுந்தோன்மருவிடந்திருவிடைமருதே (௭)

வையவாம்பெற்றமபெற்றமேறுடையார்மாதவர்காதல்வைத்தென்னை,
வெய்யவாருசெந்திப்பட்டவிட்டைபோல விழுமியோன்முன்புபின்
பென்கோ,நொய்யவாறென்னவந்துள்வீற்றிருந்தநூறுநூறாயிரங்கோடி
மையவாங்கண்டத்தண்டவானவர்கோன் மருவிடந்திருவிடைமருதே.

கலங்கலம்பொய்கைப்புனற்றெளிவிடத்துக்கலந்த மண்ணிடைக்கிடந்
தாங்கு,நலங்கலந்தடியேன்சிந்தையுட்புகுந்தநம்பனேவம்பனேனுடை
ய, புலங்கலந்தவனேயென்றுநின்றுருகிப்புலம்புவாரவம்புகாரருவி, ம
லங்கலங்கண்ணிற்கண்மணியனையான்மருவிடந்திருவிடைமருதே.(௯)

ஒருங்கிருங்கண்ணினெண்ணிலபுன்மாக்களுறங்கிருணடுநல்யாமத்தோ
ர், கருங்கணின்றிமைக்குஞ்செழுஞ்சுடர்விளக்குங்கலந்தெனக்கலந்து
ணாகருவூர், தருங்கருப்பனையநீந்தமிழ்மாலைதடம்பொழின்மருதயாழ
வுதிப்ப, வருங்கருங்கண்டத்தண்டவானவர்கோன்மருவிடந்திருவிடை
மருதே.

திருச்சிற்றம்பலம்.

அ-வது. பூந்துருத்திநம்பிகாடநம்பி அருளிச்செய்த

(திருவாரூர்-பண்-பஞ்சமம்.)

திருச்சிற்றம்பலம்.

கைக்குவான்முத்தின்சரிவளை பெய்துகழுத்திலோர்தனிவடங்கட்டி
முக்கணாயகராய்ப்பவனிபோந்திருஞான்முரிவதோராமுரிவுமையவாவுந்
தக்கபிர்ககமைகையளவுமெனைறன்றே தய்மொருப்பாடுலசதன்மேன்
மிக்கபிரானூராதியாய்வீதிவிடங்கராயநடங்குலாவினரே. (௧)

பத்தியாயுணர்வோரருளைவாய்மடுத்துப் பருகுதோறமுதமொத்தவர்க்
தித்தியாவிருக்குந்தேவர்காளிவர்தந்திருவுருவிருந்தவாபாரீர் [சே
சத்தியாய்சிவமாயுலகெலாம படைத்துந்தனிமுழுமுதலுமாய் முதற
கோர்வித்துமாயாரூராதியாய்வீதிவிடங்கராயநடங்குலாவினரே. (௨)

திருச்சிற்றம்பலம்.

(கோயில்-சாளரபாணி-பண்-பஞ்சமம்)

திருச்சிற்றம்பலம்.

முத்துமணிவயிரமாணிக்கமாலைகள்மேற
ரொத்துமிளிர்வனபொற்றாமைவிளக்கேயப்ப
வெதிதிசையுமவானவர்களேத்துமெழிலில்லை
யத்தனுக்குமம்பலமேயாடரங்கமாயிற்றே. (௧)

கடியார்கணம்புல்லர்கண்ணப்பரென்று
னடியாரமருலகமாளநீயாளாதே
முடியாமுத்திவேள்விழுவாயிரவரொடுங்
குடிவாழ்க்கைகொண்டுநீகுலாவிக்கூத்தாடினையே. (௨)

அல்லியம்பூம்பழனத்தாமூர்நாவுக்கரசைச
செல்லநெறிவகுத்தசேவகனேதென்றில்லைக்
கொல்லைவிடையேறிகூத்தாடரங்காகச
செல்வநிறைந்தசிற்றம்பலமேசேர்ந்தனையே. (௩)

எம்பந்தவல்வினைநோய்தீர்த்திட்டெனையாளுஞ்
சம்பந்தன்காழியர்கோன்றன்னையுமாட்கொண்டருளி
யம்புந்துகண்ணாளுந்தானுமணிதில்லைச
செம்பொன்செயம்பலமேசேர்ந்திருக்கையாயிற்றே. (௪)

களையாவுடலோடுசேரமானாரூரன்
விளையாமதமாறுவெள்ளானைமேல்சேரவா

முளையாமதிசூடிமூவாயிரவரொடு
மளையாவிளையாடுமம்பலநின்னாடரங்கே. (௪)

அகலோகமெல்லாமடியவர்தற்சூழப்
புகலோகமுண்டென்றுபுகுமிடநீர்தேடாதே
புவலோகநெறிபடைத்தபுண்ணியன்றன்னண்ணியசீர்
சிவலோகமாவதுவுந்தில்லைச்சிற்றம்பலமே. (௫)

களகமணிமாடஞ்சூளிகைசூழ்மாளிகைமேல்
அளகமதிநுதலாராயிழையார்போற்றிசைப்ப
வொளிகொண்டமாமணிகளோங்கிருளையாங்ககற்றுந்
தெளிகொண்டதில்லைச்சிற்றம்பலமேசேர்ந்தனையே. (௭)

பாடகமுநூபுரமும்பல்சிலம்புமார்ந்தொலிப்பச்
சூடகக்கைநல்லார்தொழுதேத்தத்தொல்லுலகி
னாடகத்தின்கூத்தைநவிற்றுமவர்நாடோறு
மாடகத்தான்மேய்ந்தவம்பலநின்னாடரங்கே. (௮)

உருவத்தெரியுருவாயூழிதோறெத்தனையும
பரவிக்கிடந்தயனுமாலும்பணிந்தேத்த
இரவிக்குநேராகியேய்ந்திலங்குமாளிகைசூழ்ந்
தரவிக்குமம்பலமேயாடரங்கமாயிற்றே. (௯)

சேடருறைதில்லைச்சிற்றம்பலத்தான்ற
னாடலதிசயத்தையாங்கறிந்துபூந்துருத்திக்
காடன்றமிழ்மாலைபத்துங்கருத்தறிந்து
பாடுமிவைவல்லார்பற்றுநிலைபற்றுவரே. (௰)

கண்டராதித்தரருளிச்செய்த

(கோயில்-பண்-பஞ்சமம்.)

திருச்சிற்றம்பலம்.

மின்னாருருவமேல்விளங்கவெண்கொடிமாளிகைசூழப்
பொன்னார்குன்றமொன்றுவந்துநின்றதுபோலுமென்னாத்
தென்னாவென்றுவண்டுபாடுந்தென்றில்லையம்பலத்து
ளென்னாரமுதையெங்கள்கோவையென்றுகொலெய்துவதே. (௧)

ஓவாமுத்தீயஞ்சுவேள்வியாறங்கநான்மறையோர்
ஆவேபடுப்பாரந்தணாளராகுதிவேட்டுயர்வா

மூவாயிரவர்தங்களோடுமுன்னரங்கேறிநின்ற
கோவேயுன்றன்கூத்துக்காணக்கூடுவதென்றுகொலோ.

முத்தியாளர்நான்மறையர்மூவாயிரவர்நின்னோ
டொத்தேவாழுந்தன்மையாளரோதியநான்மறையைத்
தெத்தேயென்றுவண்டுபாடுந்தென்றில்லையம்பலத்து
ளத்தாவுன்றனாடல்காணவணைவதுமென்றுகொலோ.

மானைப்புரையுமடமென்னோக்கிமாமலையாளொடும்
ஆனைஞ்சாடுஞ்சென்னிமேலோரம்புலிசூடுமரன்
றேனைப்பாலைத்தில்லைமல்குசெம்பொனினம்பலத்துக்
கோனைஞானக்கொழுந்துதன்னைக்கூடுவதென்றுகொலோ.

களிவானுலகிற்கங்கைநங்கைகாதலனேயருளென்
றொளிமால்முன்னேவரங்கிடக்கவுன்னடியார்க்கருளுந்
தெளிவாரமுதேதில்லைமல்குசெம்பொனினம்பலத்து
ளொளிவான்சுடரேயுன்னைநாயேனுறுவதுமென்றுகொலோ.

பாரோர்முழுதும்வந்திறைஞ்சப்பதஞ்சலிக்காட்டுகந்தான்
வாரார்முலையாண்மங்கைபங்கன்மாமறையோர்வணங்கச்
சீரான்மல்குதில்லைச்செம்பொனம்பலத்தாடுகின்ற
காரார்மிடற்றெங்கண்டனாரைக்காண்பதுமென்றுகொலோ.

இலையார்கதிர்வேலிலங்கைவேந்தனிருபதுதோளுமிற
மலைதானெடுத்தமற்றவற்குவாளொடுநாள்கொடுத்தான்
சிலையாற்புரமூன்றெய்தவில்லிசெம்பொன்னம்பலத்துக்
௫ கலையார்மறிபொற்கையினானைக்காண்பதுமென்றுகொலோ.

அல்லியங்கோல்வேந்தன்றென்னனொடுமீழமுங்கொண்டதிறற்
செங்கோற்சோழன்கோழிவேந்தன்செம்பியன்பொன்னணிந்த
வங்கோல்வளையார்பாடியாடுமணிதில்லையம்பலத்து
ளெங்கோனீசனெம்மிறையையென்றுகொலெய்துவதே.

நெடியானோடுநான்முகனும்வானவருநெருங்கி
முடியான்முடிகள்மோதியுக்கமுழுமணியின்றிரளை
யடியாரலகினாற்றிரட்டுமணிதில்லையம்பலத்துக்
கடியார்கொன்றைமாலையானைக்காண்பதுமென்றுகொலோ.

சீரான்மல்குதில்லைச்செம்பொனம்பலத்தாடிதன்னைக்
காரார்சோலைக்கோழிவேந்தன்றஞ்சையர்கோன்கலந்த

நாவின்சொற்கண்ட [illegible] திக்கணருத்தம்பு [illegible]
பேராவுலகிற்பெருமையோமெபோரின்பமெய்துவரே.

கோவைப் பதிகம் நளிர்செய்த

(கோயில் - [illegible] பண் - புறநீர்மை.)

திருச்சிற்றம்பலம்.

தாசசானசெய்திடினும் [illegible]
கசசா [illegible] கூவி [illegible]
பொசசார் வுபிலலாமை [illegible]
நசசாய [illegible] கடம்பாயிலுநம்பாமே.

தம்பானை சாய [illegible] சொல்லு
மெம்போல்வாா கிலலாமையென்னளவேயறிந்தொழிந்தேன்
வமபா [illegible] வழியாடி [illegible]
நமபாய கான்டிருத்தில் [illegible] நம்பாமே. (உ)

பொசியா [illegible] கொமபுநிறைரு [illegible]
திசைகோ [illegible]
நிசையா [illegible]
னசைய [illegible] (ங)

ஆயா தசமய [illegible]
நோயொடு [illegible]
போயாவித [illegible]
ஞமேனா [illegible] (ச)

கின்றுமினைத்திருத் [illegible]
தென்றியொருகானி [illegible]
கன்றுபிரிகற் [illegible]
நன்றிது வோ திருத்தில் [illegible] (ரு)

பிமைத்துறம் [illegible]
அடியறிபவுணர்த்துவது மக [illegible] கன்டு

* [illegible] நிறைந்தால். நிறை
யேரிபா [illegible]
ஒ-கனைபொசியும் - [illegible]
† ஒச்த - வேதம்.

விடுவதுபுல்லோரொருதுமொன்றினுக்குவையிடுதல்
நடுவிதுவோதிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (௬)

மண்ணோடுவிண்ணளவுமனிதரொடுவானவர்க்குங்
கண்ணாவாய்கண்ணாகாதொழிதலுநான்மிககலங்கி
யண்ணாவோவென்றண்ணாந்தலமந்துவிழிதருவே
நண்ணாயாற்றிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (௭)

வாடாவாய்நாப்பிதற்றியுனைநினைந்துநெஞ்சுருகி
வீடாகச்செய்குற்றேவலெற்றேமற்றறிந்துபோயிற்
கூடாமைக்கைவந்துகுறுகுமாறியானுன்னை
நாடாயாற்றிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (௮)

வாளாமாலயன்வீழ்ந்துகாண்பரியமாண்பிதனைத்
தோளாரக்கையாரத்துணையாரத்தொழுதாலு
மாளோநீயுடையதுவுமடியேனுன்றாள்சேரு
நாளேதோதிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (௯)

பாவார்ந்ததமிழ்மாலைப்பத்தரடித்தொண்டனெடுத்த
தோவாதேயழைக்கின்றானென்றருளினன்றுமிகத்
தேவேதென்றிருத்தில்லைக்கூத்தாடிநாயடியேன்
சாவாயுநினைக்காண்டலினியுனக்குக்கடப்பாடே. (௰)

திருச்சிற்றம்பலம்.

திருவாலியமுதனாரருளிச்செய்த

முதலாவது

(கோயில்-பாதாதிகேசம்-பண்-பஞ்சமம்.)

திருச்சிற்றம்பலம்.

மையன்மாதொருகூறன்மால்விடையேறிமான்மறியேந்தியதடங்
கையன்கார்புரையுங்கறைக்கண்டன்கனன்மழுவா
ளையனாழ்புனல்வானணிநீர்வயற்றில்லையம்பலத்தான்
செய்யபாதம்வந்தென்சிந்தையுள்ளிடங்கொண்டனவே. (௧)

சலம்பொற்றாமரைதாழ்ந்தெழுந்தகடற்றடம்புனல்வாய்மலர்தழீஇ
யலம்பிவண்டறையுமணியார்தில்லையம்பலவன்
புலம்பிவானவர்தானவர்புகழ்ந்தேத்தவாடுபொற்கூத்தனார்கழற்
சிலம்புகிண்கிணியென்சிந்தையுள்ளிடங்கொண்டனவே. (௨)

இருண்டவார்குழற்கோதைமார்குயில்போன்மிழற்றியகோலமாளிகை
திரண்டதில்லைதன்னுட்டிருமல்குசிற்றம்பலவனை
மருண்டமாமலையான்மகடொழவாடுங்கூத்தன்மணிபுனைதரு
திரண்டவான்குறங்கென்சிந்தையுள்ளிடங்கொண்டனவே. (௩)

போழ்நதியானைதன்னைப்பொருப்பன்மகளுமையச்சங்கண்டவன்
றாழ்ந்ததண்புனல்சூழ்தடமல்குசிற்றம்பலவன் [ஞெடு
சூழ்ந்தபாயபுலித்தோன்மிசைத்தொடுத் தவிகரும்பொடொண்ணூல்தவளரி
தாழ்ந்தகச்சதன்றேதமியேனைக்களர்விக்கதே. (௪)

பந்தபாசமெலாமறப்பசுபாசநீக்கியமுனிவரோ
டந்தணாவணங்குமணியார்தில்லையம்பலவனை
செங்கழலடிமேனியுந்திகழுந்திருவயிறுமவ்வயிற்றினு
ளுந்திவானசுழியென்னுளத்துள்ளிடங்கொண்டனவே. (௫)

குதிரைமாவொடுதேர்பலகுவிந்துநின்றுதில்லையுட்கொம்பனாரோடு
மதுரவாய்மொழியார்மகிழ்ந்தேத்துசிற்றம்பலவனை
யதிரவார்கழலவீசிநின்றழகாநடமாடிலங்குகூத்தன்மேல்
திகழுதரபந்தனமென்னுள்ளத்துளேயிடங்கொண்டனவே. (௬)

படங்கொள்பாம்பணையானொடுபிரமன்பரமாயாவாரெனவொன்று
தடங்கையாற்றொழவுந்தரற்கரியசிற்றம்பலவன் [சை
றடங்கைநான்குமத்தோளுந்தடமார்பினிற்பொலிபூணுமேற்றி
விடங்கொளகண்டமன்றேவினையேனைமெலிவிக்கதே. (௭)

செய்யதோடுடன்கமலமலர்சூழ்தருதில்லைமாமறையோர்கடாந்தொழ
வையமுய்யநின்றுமகிழ்ந்தாடுசிற்றம்பலவன்
செய்யவாயின்முறுவலுந்திகழுந்திருக்காதுங்காதினில்மாத்திரைகளோ
ளையதோடுமன்றேயடியேனையாட்கொண்டனவே. (௮)

செற்றுவன்புரந்தீயெழச்சிலைகோலியாரழலூட்டினானவன்
எற்றிமாமணிகளெறிநீர்த்தில்லையம்பலவன்
மற்றைநாட்டமிரண்டொடுமலருந்திருமுகமுமுகத்தினு
ணெற்றிநாட்டமன்றேநெஞ்சுளேதிளைக்கின்றனவே. (௯)

*தொறுக்கள்வான்கமலமலருழக்கக்கரும்புநற்சாறுபாய்தர
மக்றுகமாய்க்கயலகண்மடைபாய்தில்லையம்பலவன்
முறுகுவார்சிகைதன்னொடுமுகிழ்த்தவவ்வகத்திமொட்டொடுமத்தமும்
பிணைக்கொளசென்னியன்றேபிரியாதென்னுணின்றனவே. (௰)

* தொறுக்கள்-பசுக்கள்.

தூவிநீரொடுபூவவைதொழுதேத்துகையினராகிமிக்கதோ
ராவலின்னலிழுந்தியமர்ந்துழியலன்பினராயத்
தேவர்கோதொழுவாடியதில்லைக்கூத்தனைத்திருவாலிசொலவிவை
மேவவல்லவர்கள்விடையானடிமேவுவரே. (௰௧)

திருச்சிற்றம்பலம்.

௨-வது

(கோயில்பவளமால்வரை-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பவளமால்வரையைப்பனிபடர்ந்தனையதோர் படரொளிதருதிருநீறுங்
குவளைமாமலர்க்கண்ணும்வெண்ணகையுந் துன்றுபொற்*குழற்றிருச்ச
திவளமாளிகைசூழ்தருதில்லையுட்டிருநடம்புரிகின்ற [டையுந்
தவளவண்ணனைநினைதொறுமென்மனந்தழன்மெழுகொக்கின்றதே. (௧)

ஒக்கவொட்டந்தவக்கியுமகியமுமலைகடலொலியோடு
எக்குவிழ்தருநெஞ்சினைப்பாயதனுநிறைவழிந்திருப்பேனைச்
செக்கர்மாளிகைசூழ்தருதில்லையுட்டிருநடம்வகைபாலே
பக்கமோட்டந்தமன்மதன்மலர்க்கணைபடுந்தொறுமலர்ந்தேனே. (௨)

அலந்துபோயினேனம்பலக்கூத்தனேயணிதில்லைநகராளீ
சிலந்தியையரசாள்கவென்றருள்செய்ததேவதேவீசனே
யுலந்தமார்க்கண்டிக்காகியகாலனையுயிர்செகவுதைகொண்ட
மலர்ந்தபாதங்கள்வனமுலைமேலொத்தவந்தருள்செய்யாயே. (௩)

அருள்செய்தாடுநல்லம்பலக்கூத்தனேயணிதில்லைநகராளீ
மருள்செய்தென்றனைவனமுலைபொன்பயப்பிப்பதுமவழகாமோ
திரளுநீண்மணிக்கங்கையைத்திருச்சடைச்சேர்த்தியச்செய்யாளுக்
குருவமபாகமுமீந்துநல்லந்‡திலையையொண்ணுதல்வைத்தோனே. (௪)

வைத்தபாதங்கண்மாலவன்காண்கிலன்மலரவன்முடிதேடி
யெய்த்துவந்திழிந்தின்னமுந்துதிக்கின்றுரொழின்மறையவறுலே
செய்த்தலைக்கமலம்மலர்ந்தோங்கியதில்லையம்பலத்தானைப்
பத்தியாற்சென்றுகண்டிடவென்மனம்பதைபதைப்பொழியாதே. (௫)

---

* குழற்சடை. சொன்னடையாகக்கட்டியசடை.

† ஓட்டந்தஅந்தி. எக்குப்பரந்தஅந்தி

‡ திலைய என்பது. திலய எனக்குறுகினது. திலை: நெற்றிக்கண்ணில் வைத்தென்ப பொருள்கொள்க.

தேய்ந்துமெய்வெளுத்தகம்வளைந்தரவினையருசித்தானிருந்தேயுங்
காய்ந்துவந்துவந்தென்றனைவலிசெய்துகதிர்நிலாவெரிதூவு
மாயநதான்மறையந்தணர்தில்லையுள்ளம்பலத்தனலாடல்
வாய்ந்தமாமலர்ப்பாதங்கள்காண்பதோர்மனத்தினையுடையோர்க்கே. ()

உடையுமபாய்புலித்தோலுநல்லரவமுமுண்பதும்பலிதேர்ந்து
விடையதூர்வதுமேவிடங்கொடுவனாயாகிலுமென்னெஞ்ச
மடைகொளவாளைகள்குதிகொளும்வயற்றில்லையம்பலத்தனலாடு
முடையகோவினையன்றிமற்றொருவரையுமுள்ளுவதறியேனே. (எ)

அறிவுமிக்கநன்றுணமுநிறைமையுமாசையுமிங்குள்ள
வுறவும்பெற்றநற்றாயொடுதந்தையுமுடன்பிறந்தவரோடும்
பிரியவிட்டுனையடைந்தனனேன்றுகொள்பெரும்பற்றப்புலியூரின்
மறைநலோன்குருந்தொன்றந்தணரேத்தநன்மாநடமகிழ்வானே. (அ)

*வானவருடைமைந்தனேயோவென்பன்வந்தருளாயென்பன
பாவனையநடனுடியபடர்சடைப்பாலவண்ணனேயென்பன்
றேனமர்பொழில்சூழ்தருதில்லையுட்டிருநடமபுரிகின்ற
வேனமாமணிபூணெழின்மார்பனேயெனக்கருள்புரியாயே. (கூ)

புரியுமபொன்மதில்சூழ்தருதில்லையுட்பூசுரர்பலர்போற்ற
வெரியதாடுமெம்மீசனைககாதலித்தினையவண்மொழியாக
வரைசெய்மாமதின்மயிலையர்மன்னவன்மறைவலதிருவாலி
பரவல்பத்திவைவல்லவர்பரமனதடிநிழல்பணிவாரே. (ய)

திருச்சிற்றம்பலம்.

கூ-வது

(கோயில்-பண்-இந்தளம்.)

திருச்சிற்றம்பலம்.

அல்லாய்பபகலாயருவாயுருவாயாராவமுதமுமாய்க்
கல்லால்நிழலாய்கயிலைமலையாய்காணவருளென்று
பல்லாயிரமபேர்பதஞசலிகளபரவவெளிப்படடுச
செல்வாயமதிறறில்லைக்கருளித்தேவனாடுமே. (க)

அன்னநடையாரமுதமொழியாரவர்கள்பயிறில்லை
தென்னன்றமிழுமிசையுங்கலந்தசிற்றம்பலந்தன்னுட்
பொன்னுமணியுநிரந்ததலத்துப்புலித்தோல்பியற்கிட்டு
மின்னினிடையாளுமையாளகாணவிகிர்தனாடுமே. (உ)

* வானவருடைமைந்தன், தேவாகள தஙகளுக்கு ஆதரவாக உடைய வல்லுவன் என்னவே தேவாகளையும ஆதரிக்கததக்கவல்லவன் எனப்பொருளமைமைறதிக.

இளமென்முலையாரெழின்மைந்தரொடுமேராரமளிமேற்
றிளையுமாடத்திருவார்தில்லைச்சிற்றம்பலந்தன்னுள்
வளர்பொன்மலையுள்வயிரமலைபோலவலக்கைகவித்துநின்
றளவில்பெருமையமரர்போற்றவழகனாடுமே. (௧)

சந்துமகிலுந்தழைப்பீலிகளுஞ்சாதிபலவுங்கொண்
டுந்தியிழியு*நிவவின்கரைமேலுயர்ந்தமதிற்றில்லைச்
சிந்திப்பரியதெய்வப்பதியுட்சிற்றம்பலந்தன்னு
ளந்திமுழவங்கொட்டநட்டநாதனாடுமே. (௪)

ஓமப்புகையுமகிலின்புகையுமுயர்ந்துமுகிறோயத்
தீமெய்த்தொழிலார்மறையோர்மல்குசிற்றம்பலந்தன்னுள்
வாமத்தெழிலா[illegible]சிலம்பார்க்கத்
தீமெய்ச்சடை[illegible]னாடுமே. (௫)

குரவங்கோங்கங்குளிர்புன்னைகைதைகுவிந்தகரைகண்மேற்
றிரைவந்துலவுந்தில்லைமல்குசிற்றம்பலந்தன்னுள்
வரைபோன்மலிந்தமணிமண்டபத்துமறையோர்மகிழ்ந்தேத்த
வரவமாடவனலையேந்தியழகனாடுமே. (௬)

சித்தர்தேவரியக்கர்முனிவர்தேனார்பொழிற்றில்லை
யத்தாவருளாயணியம்பலவாவென்றென்றவரேத்த
முத்துமணியுநிரந்ததலத்துமுளைவெண்மதிசூடிக்
கொத்தார்சடைகடாழநட்டங்குழகனாடுமே. (௭)

அதிர்த்தவரக்கனெரியவிரலாலடர்த்தாயருளென்று
துதித்துமறையோர்வணங்குந்தில்லைச்சிற்றம்பலந்தன்னு
ளுதித்தபோழ்திலிரவிகதிர்போலொளிமாமணியெங்கும்
பதித்ததலத்துப்பவளமேனிப்பரமனாடுமே. (௮)

மாலோடயனுமமரர்பதியும்வந்துவணங்கிநின்
றோலகண்டாவரனேயருளாயென்னவென்றவரோத்தச்
சேலாடும்வயற்றில்லைமல்குசிற்றம்பலந்தன்னுட்
பாலாடுமுடிச்சடைகடாழப்பரமனாடுமே. (௯)

நெடியசமணுமறைசாக்கியருநிரம்பாப்பல்கோடிச்
செடியுந்தவத்தோரடையாத்தில்லைச்சிற்றம்பலந்தன்னு

---

* நிவா என்பது ஓர் நதி. அது நிவவெனக் குறுகி நின்றது.

† மழலைச்சிலம்பு மிருதுவான ஓசையையுடைய சிலம்பு.

சீருகளவனாயாரூர்நம்பியவாகவிசைபாட [illegible]
கொடியுமயிடையும் பூண்டாயகோல [illegible] கநடுமே. (௰)

வானோர்பணியமணலே [illegible] தமனனிநடமாடும்
தேனார்பொழில்சூழ்தில்லைமலர்சிற்றம்பலத்தானை
தானான்மறையானமுதவாய்ச்சொன்னதமிழ்மாலை
பானேர்பாடல்பத்தும்பாட பாவநாசமே (௰௧)

திருச்சிற்றம்பலம்.

பண் [illegible]

(கோயில் [illegible])

திருச்சிற்றம்பலம்.

சோலமலர்நெடுங்கண் [illegible] வாயசெய்கொடி யேரிடையீர்
பாலினையின்னமுதை [illegible]
சேலுகளும் [illegible] றம்பலத்
தேவுடைஎம்மிறையையென்றுகொல்காண்பதுவே (௧)

காண்பதுயானென்றுசொல்லகிலாமறையாய்ச்சொல்லை
யாண்பெண்ணாருவருவென்றறிதற்கரியவனை
சேணடணிமாளிகைசூழ்தில்லைமாநகர்ச்சிற்றம்பலத்துள்
மாணப்புனைநாடகஞ்செயமணியோனைமலர்பாதங்களே. (௨)

களவிழ் காமனைமேனாண்டயவன் [illegible]
வொளவெளியினென [illegible]
தெளியகண்பொ [illegible] றம்பலத்
துளவெளியாடு [illegible] வரிகே. (௩)

அரிவைபோகூடு [illegible] மால்
கரியினுரிவை [illegible] காறுமபாதமபிரான
புரிபவாகினை [illegible] திருச்சிற்றம்பலத்
தெரிமகிழந்தாடுகின்ற [illegible] வனையே. (௪)

இறைவனையெனக்கினியயென்றுளேயுயிராப்பாகினைற
மறைவனைமணணுமவிண்ணுமவானோடாயமாநித
சிறையணிவண்டறையுந்தில்லைமாநகர்ச்சிற்றம்பல
நிறையணியாமிறையையினைத்தேனினியபோதவனே. (௫)

நினைத்தேனினியபோககுவதேமலகநிர்ஜோ
நினைப்பாமனகத்துவாயிருந்தயணியையமாணிக்கத்தைக்

கனைத்தேயிழியுங்கழனிக்கனகங்கதிரொண்பவளஞ்
*சினத்தொடுவெந்தெறியுந்தில்லைமாநகர்க்கூத்தனையே. (சா)

கூத்தனைவானவர்தங்கொழுந்தைக்கொழுந்தாயெழுந்த
மூத்தனைமூவுருவின்முதலைமுதலாகிநின்ற
வாத்தனைத்தான்படைக்குமந்தணர்தில்லையம்பலத்து
ளேத்தநின்றாடுகின்றவெம்பிரானடிசேர்வன்கொலோ. (எ)

சேர்வன்கொலோவன்னைமீர்திகழும்மலர்ப்பாதங்களை
யார்வங்கொளத்தழுவியணிநீறென்முலைக்கணியச்
சீர்வங்கம்வந்தணவுந்தில்லைமாநகர்ச்சிற்றம்பலத்
தேர்வங்கைமான்மறியனெம்பிரானென்பனேசனையே. (அ)

நேசமுடையவர்தந்நெஞ்சுளேயிடங்கொண்டிருந்த
காய்சினமால்விடையூர்கண்ணுதலைக்காமருசீர்த்
தேசமிகுபுகழோர்தில்லைமாநகர்ச்சிற்றம்பலத்
தீசனையெவ்வுயிர்க்குமெம்மிறைவனென்றேத்துவனே. (கூ)

இறைவனையேத்துகின்றவிளையாண்மொழியின்றமிழான்
மறைவலநாவலர்கண்மகிழ்ந்தேத்துசிற்றம்பலத்தை
யறைசெந்நெலவான்கரும்பினணியாலைகள்சூழ்மயிலை
மறைவலவாலிசொல்லைமகிழ்ந்தேத்துகவானெளிதே. (௰)

திருச்சிற்றம்பலம்

புருடோத்தமநம்பி அருளிச்செய்த

(கோயில்-பண்-பஞ்சமம்.

வாரணிநறுமலர்வண்டுகெண்டுபஞ்சமஞ்செண்பகமாலைமாலை [லோ
வாரணிவனமுலைமெலியும்வண்ணம்வந்துவந்திவைநம்மைமயக்குமா
சீரணிமணிதிகழ்மாடமோங்குதில்லையம்பலத்தெங்கள்செல்வனே
யாரெனையருள்புரிந்தஞ்சலென்பாராவியின்பரமென்றனாதரவே.

ஆவியின்பரமென்றனாதரவுமருவினையேனைவிட்டம்மவம்ம
பாவிவன்மனமிதுபையவேபோய்ப்பனிமதிச்சடையான்பாலதாலோ
நீவியுநெகிழ்ச்சியுநிறையழிவுநெஞ்சமுநஞ்சமின்மையாலே
யாவியின்வருத்தமிதாரறிவாரறிவானம்பலத்தருநடமாடுவானே. (உ)

அம்பலத்தருநடமாடவேயுமியாதுகொல்விளைவதென்றஞ்சிநெஞ்ச[ஞ்
சும்பர்கள்வன்பழியாளர்முன்னேயூட்டினாரநஞ்சையென்றேயுமாயே

---

* சினத்தொடு என்பதனைச்சினந்தொடு எனப் பதம்பிரிக்க

வன்பலபடையுடைப்பூதஞ்சூழவான்வர்க்கங்களைமாற்றியாங்கே, யெ ன்பெரும்பயலைமைதீரும்வண்ணமெழுந்தருளாயெங்கள்வீதியூடே. ( )

எழுந்தருளாயெங்கள்வீதியூடே யேதமின்முனிவரோடெழுந்த ஞானக், கொழுந்ததுவாகியகூத்தனேநின்குழையணிகாதினின்மாத்தி ரையுஞ், செழுந்தடமலர்புரைகண்கண்மூன்றுஞ்செங்கனிவாயுமென் சிந்தைவவ்வ, வழுந்துமென்னுருயிர்க்கென்செய்கேனோவரும்புனலல மருஞ்சடையினானே. (௪)

அரும்புனலலமருஞ்சடையினானை யமரர்களடிபணிந்தாற்றவந் நாட், பெருமபுரமெரிசெய்தசிலையின்வார்த்தைபேசவுநையுமென்பே தைநெஞ்சம், கருந்தடமலர்புரைகண்டவண்டார் காரிகையார்முன்பெ ன்பெண்மைதோற்றேன், றிருந்தியமலரடிநசையினாலேதில்லையம்பல த்தெங்கடேவதேவே. (௫)

தில்லையம்பலத்தெங்கடேவதேவைத்தேறியவந்தணர் சிந்தைசெ ய்யு, மெல்லியதாகியவெழிலொளிசோதியென்னுயிர்காவல்கொண்டி ருந்தவெந்தாய், பல்லியபாரிடந்தலையோடிடறிப்பாதமென்மலரடிநோ வநீபோ, யல்லினிலருநடமாடிலெங்களாருயிர்காவலிங்கரிதுதானே.

ஆருயிர்காவலிங்கருமையாலேயந்தணர்மதலைநின்னடிபணியக்
கூர்நுனைவேற்படைக்கூற்றஞ்சாயக்குரைகழல்பணிகொளமலைந்ததெ
ஆரினியமரர்கள்குறைவிலாதாரவாவர்படுதுயர்களையநின்ற [ன்னே
சீருயிரேயெங்கடில்லைவாணாசேயிழையார்க்கினிவாழ்வரிதே. (௭)

சேயிழையார்க்கினிவாழ்வரிதுதிருச்சிற்றம்பலத்தெங்கள்செல்வனேநீ
தாயிலுமிகநல்லையென்றடைந்தேன்றனிமையைநினைகிலைசங்கராவுன்
பாயிரும்புலியதளின்னுடையுமைய மேலெடுத்தபொற்பாதமுங்கண்
டேயிவளிழந்ததுசங்கமாவாவெங்களையாளுடையீசனேயோ. (௮)

எங்களையாளுடையீசனேயோவிளமுலைமுகங்கெழுயங்கிநின்பொற் பங்கயம்புரைமுகநோக்கிநோக்கிப்பனிமதிநிலவுதென்மேற்படரச், செ ங்கயல்புரைகண்ணிமார்கண்முன்னேதிருச்சிற்றம்பலமுடனேபுகுந்து, அங்குன்பணிபலசெய்துநாளுமருள்பெறிலகலிடத்திருக்கலாமே. (௯)

அருள்பெறிலகலிடத்திருக்கலாமென்றமரர்கடலைவனுமயனுமாலு, மிருவருமறிவுடையாரின்மிக்காரேத்துகின்றாரின்னமெங்கள்கூத்தை,ம ருள்படுமழலைமென்மொழியுமையாள்கணவனைவல்வினையாட்டியேனு, னருள்பெறவலமருநெஞ்சமாவாவாசையையளவறுத்தாரிங்காரே. (௰)

ஆசைக்கையளவறுத்தாரிங்காரேயம்பலத்தருநடமாடுவானை
வாசகன்மலரணிகுழன்மடவார்வைகலுங்கலந்தெழுமாலைப்பூசனை
மாசிலாமறைபலவோதுநாவன்வன்புருடோத்தமன்கண்டுரைத்த
வாசகமலர்கள்கொண்டேத்தவல்லார்மலைமகளகணவனையணைவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

உ-வது. (கோயில் பண்-பஞ்சமம்.)

திருச்சிற்றம்பலம்.

வானவர்கள்வேண்டவளர்நஞ்சையுண்டார்தா
மூனமிலாவெள்ளைவொளிவளைகள்கொள்வாரோ
தேனலவரிவண்டறையுந்தில்லைச்சிற்றம்பலவர்
நாணமரோ[illegible]தோடகமேயாடுவரோ. (௧)

ஆடிவருங்*காரரவுமைம்மதியுமபைங்கொன்றை
சூடிவருமா[illegible]டென்றேன்வளைகடோற்றேனு
தேடியிமையோர்பரவுந்தில்லைச்சிற்றம்பலவ
ராடிவரும்போதருகேநிற்கவுமொட்டாரோ. (௨)

ஓட்டாவனையவுணர்முப்புரங்களோரம்பாற்
பட்டாங்கழல்விழுங்கவெய்ததுகந்தபண்பினார்
சிட்டார்மறையோவாத்தில்லைச்சிற்றம்பலவர்
கொட்டாநடமாடக்கோலவளைகள்கொள்வாரோ. (௩)

ஆரேயிவைபடுவாரையங்கொளவந்து
போரோடியென்றுபுருவமிடுகின்றார்
தேரார்விழவோவாத்தில்லைச்சிற்றம்பலவர்
ஈராநோய்செய்வாரையொக்கின்றார்காணீரே. (௪)

காணீரேயென்னுடையகைவளைகள்கொண்டார்தாஞ்
சேணார்மணிமாடத்தில்லைச்சிற்றம்பலவர்
பூணார்வனமுலைமேற்பூவம்பாற்காமவேள்
×ஆணாகின்றவா[illegible]ண்டுமருளாரே. (௫)

ஏயிவரோவானவர்க்கும்வானவரோயென்பாராற்
றாயிவரோயெல்லா[illegible]தந்தந்தையுமாமென்பாராற்
பேய்மதியஞ்சூடிய தில்லைச்சிற்றம்பலவர்
வாயினகேட்டறிவார்வையகத்தோராவாரே. (௬)

---

*காரரவு-கரும்பாம்புகள். இவைதாருகாவனத்துரிஷிகளாலேவப்பட்டவை.
× ஆண் ஆகின்றது- வீரஞ்செலுத்தல்.

ஆவாவிவர்தந்திருவடிகொண்டந்தகன்றன்
மூவாவுடலவியக்கொன்றுகந்தமுக்கண்ணர்
தேவாமறைபயிலுந்தில்லைச்சிற்றம்பலவர்
கோவாவிவளைகள்கொள்வாரோவென்னையே. (௭)

என்னைவலிவாராரொன்றறிவிலநகையார்கோன்
மன்னுமுடிகணெரித்தமணவாளர்
செந்நெல்விளைகழனித்தில்லைச்சிற்றம்பலவர்
முன்னந்தான்கண்டறிவாரொவ்வாரிம்முகத்தே. (௮)

முத்தர்முதுபகலேவந்தென்மனில்புகுந்து
பத்தர்பலியிடுகவென்றெங்கும்பரமாயினார்
சித்தர்கணம்பயிலுந்தில்லைச்சிற்றம்பலவர்
கைத்தலங்கள்வீசிநின்றாடுங்கால்நோக்காரே. (௯)

நோக்காததன்மையானோக்கிலோம்யாமென்னு
மாக்காதலிம்புமலரோனிந்தித்தும
சேக்காதலித்தேறுந்தில்லைச்சிற்றம்பலவ
ரூர்க்கேவந்தென்வளைகள்கொள்வாரோவொண்ணுதலீர். (௰)

ஒண்ணுதலிகாரணமாவுமையாள்கொழுநனுமாய
கண்ணுதலான்றன்னைப்புருடோத்தமன்சொன்ன
பண்ணுதலைப்பத்தும்பயின்றாடிப்பாடவே
மண்ணுதலைப்பட்டிங்கினிதாயிருப்பாரே. (௰௧)

திருச்சிற்றம்பலம்.

சேதிராயரருளிச்செய்த

(கோயில்—பண் பஞ்சமம்.)

திருச்சிற்றம்பலம்.

சேலுலாம்வயற்றில்லையுள்ளீருமைச்
சாலநாளயன்சார்வதினாலிவள்
வேலையார்விடமுண்டுகந்தீரென்று
மாலதாகுமென்வாணுதலே. (௧)

வாணுதற்கொடிமாலதுவாய்மிக
நாணமற்றனணானறியேனினிச்
சேணுதற்பொலிதில்லையுள்ளீருமைக்
காணிலெய்ப்பிலள்காரிகையே. (௨)

சேதிராயரருளிச்செய்ததிருவிசைப்பா.

காரிகைக்கருளீர்கருமால்கரி
யீருரித்தெழுபோர்வையினீர்மிகு
சீரியற்றில்லையாய்சிவனேயென்று
வேரிநற்குழலாளிவள்விம்முமே. (௩)

விம்மிவிம்மிவெய்துயிர்த்தாளெனு
மும்மையேநினைந்தேத்துமொன்றாகிலள்
செம்மலோர்பயில்தில்லையுளீரொங்க
ளம்மலோதியயர்வுறுமே. (௪)

அயர்வுற்றஞ்சலிகூப்பியந்தோவெனை
யுயவுன்கொன்றையந்தாரருளாயெனுந்
செயலுற்றார்மதிற்றில்லையுளீரிவண்
மயலுற்றாளென்றன்மாதிவளே. (௫)

மாதொர்கூறன்வண்டார்கொன்றைமார்பனென்
றோதிலுய்வனென்னைடாங்கிளியேயெனுஞ்
சேதித்தீர்சிரநான்முகனைத்தில்லை
வாதித்தீரென்மடக்கொடியையே. (௬)

கொடியைக்கோமளச்சாதியைக்கொம்பிளம்
பிடியையென்செய்திட்டீர்பகைத்தார்புர
மிடியச்செற்றதில்லைக்காவலீரொன்று
முடியுநீர்செய்தலறமன்றமே. (௭)

அறவனேயென்றுமன்றிப்பிறனேயா
மறவனையெனைவாளாநீசெய்யேலென்றுந்
சிறைவண்டார்பொழிற்றில்லையுளீரென்னும்
பிறைகுலாநுதற்பெய்வளையே. (௮)

அன்றருக்கனைப்பல்லிறுத்தானையைக்
கொன்றுங்காலனைக்கோளிழைத்தீரெனுந்
தென்றலார்பொழிற்றில்லையுளீரிவ
ளொன்றுமாகிலளும்பொருட்டே. (௯)

ஏயுமாறெழிற்சேதியர்கோன்றில்லை
நாயனாரைநயந்துரைசெய்தன
தூயவாறுரைப்பார்துறக்கத்திடை
யாயவின்பமெய்திருப்பரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

திருவிசைப்பா திருப்பல்லாண்டு முற்றிற்று.